இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

அவர் அறிவு தெளிந்தவராய், 'என் தந்தையின் கூலியாள்களுக்குத் தேவைக்கு மிகுதியான உணவு இருக்க, நான் இங்குப் பசியால் சாகிறேனே! நான் புறப்பட்டு என் தந்தையிடம் போய், அப்பா, கடவுளுக்கும் உமக்கும் எதிராக நான் பாவம் செய்தேன்; இனிமேல் நான் உம்முடைய மகன் எனப்படத் தகுதியற்றவன்; உம்முடைய கூலியாள்களுள் ஒருவனாக என்னை வைத்துக்கொள்ளும் என்பேன்' என்று சொல்லிக் கொண்டார். உடனே அவர் புறப்பட்டுத் தம் தந்தையிடம் வந்தார். (லூக்கா 15:17-20)

## உக்ரைன், ரஷ்யாவை அமல அன்னைக்கு அர்ப்பணிப்பு

# உலக ஆயர்களுக்குத் திருத்தந்தையின் கடிதம்

**வத்திக்கான்:** உக்ரைன் மற்றும் ரஷ்ய நாடுகளை அன்னை மரியாவின் மாசற்ற திருஇதயத்திற்கு அர்ப்பணிக்கும் நிகழ்வு தொடர்பாக உலகின் அனைத்து ஆயர்களுக்கும் கடிதம் ஒன்றை எழுதியுள் ளார் திருத்தந்தை பிரான்சிஸ். கடந்த ஒரு மாத காலமாக உக்ரைனில் நடந்துவரும் போர் அந்நாட்டு மக்களைப் பெரும் துயரத்திற்கு ஆளாக்கி வருகிறது என்றும், இருள் சூழ்ந்துள்ள இந்நேரத்தில் அமைதியின் அரசியாம் அன்னை மரியாவின் பரிந்துரையையும், அவரது தாய்மைத்துவ அரவணைப்பையும் நாட வேண்டிய அவசரத்தில் திருஅவை உள்ளது என்றும் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

துயருறும் எண்ணற்ற மக்களின் விண்ணப் பங்களுக்குப் பதிலளிக்கும் விதமாக, மார்ச் 25, வெள்ளியன்று உக்ரைன் மற்றும் ரஷ்ய நாடுகளை அன்னை மரியாவின் மாசற்ற திருஇதயத்திற்கு அர்ப்பணிக்கும் நிகழ்வு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் அக்கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

கடவுள் வழங்கிய மன்னிப்பினால் புதுப் பிக்கப்பட்ட இதயங்களுடன், நாம் அமைதிக்காக வேண்டுவது பொருத்த மானது என்பதால், புனித பேதுரு



பேராலயத்தில் ரோம் நேரப்படி மாலை 5:00 மணிக்கு நடைபெறும் மன்னிப்பு வழிபாட்டில் அந்நாடுகளை அன்னை மரியாவின் மாசற்ற திருஇதயத்திற்கு அர்ப்பணிக்கும் திருச்சடங்கு தொடங்கும் என்றும், இது மாலை 6.30 மணிவரை தொடர்ந்து நடைபெறும் என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அக்கடிதத்தில் எடுத்துக்காட்டியுள்ளார்.

மக்களின் பெரும் துயரங்களையும் அழுகுரல்களையும் அன்னை மரியாவிடம் அர்ப்பணித்து இவ்வுலகின் எதிர்காலத்தை அவரது பொறுப்பிலும் பாதுகாவலிலும் ஒப்புக்கொடுப்போம் என்றும் கூறியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இந்நிகழ் வில் அருள்பணியாளர்கள், இருபால் துறவியர், மற்றும் பொதுநிலையினர் அனைவரையும் ஆர்வமுடன் பங்கெடுக்கத் தூண்டுமாறும் அக்கடிதத்தில் ஆயர்களை வலியுறுத்தியுள்ளார்.

1917ம் ஆண்டில் பாத்திமாவில் அன்னை மரியா கேட்டுக்கொண்டதுபோல, எம் மக்கள் கணக்கிடமுடியாத கடுந்துயரங் களை எதிர்க்கொண்டுவரும் இந்நாள் களில், இவ்விரு நாடுகளையும் அன்னை மரியாவின் மாசற்ற திருஇதயத்திடம் பொதுப்படையாக அர்ப்பணிக்கவேண்டும் என்று, உக்ரைன் ஆயர்கள், திருத்தந்தைக்கு அனுப்பியுள்ள மடலில் கூறியுள்ளனர் என்பதையும் நினைவுப் படுத்தினார் திருத்தந்தை.

## மரியாயின் சேனை 100வது ஆண்டு நிறைவ விழாவைக் கொண்டாடியது.

**கோலாலம்பூர்:** கோலாலம்பூர் மாமறை மாட்டத்தின் பேராயர் ஜூலியன் லியாவ் அவர்கள் மரியாயின் சேனை நூற்றாண்டு விழாவை கடந்த மார்ச் 20, 2022 அன்று செராஸ் புனித பிரான்சிஸ் அசிசியார் பங்கு ஆலயத்தில் சிறப்பு திருப்பலி, ஆராதனையுடன் நினைவு கூர்ந்தார்.

மாலை 4.00 மணி ஆராதனைக்கு முன், மரியாயின் சேனை உறுப்பினர்களின் இறைவேண்டலைத் தொடர்ந்து நான்கு மொழிகளில் செபமாலை ஒப்புக்கொடுக் கப்பட்டது.

பேராயர் ஜூலியன் லியாவ் அவரது மறையுரையில், ஒரு காலத்தில் மரியாயின் சேனை பங்கு அளவில் கத்தோலிக்கர்கள் மட்டில் கிறிஸ்தவ நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதில் சிறந்து விளங்கியது என்றார், இன்று, பல்வேறு தனித்துவ மான பங்கு பணிக்குழுக்கள் இருந்தாலும் பங்குகள் வரலாற்றில் மரியாயின் சேனை ஒரு சிறப்பு மற்றும் உயர்ந்த இடத்தைப் பெற்றுள்ளது என்று பெருமிதம் கொண்ட தோடு, சாதாரண, எளிய மக்களையும் திருஅவையோடு ஒன்றிக்க பேருதவியாக இருந்தது என்றார்.

அவர் தொடர்ந்து. தொடக்கத்தில், மருத்துவமனைகள் மற்றும் வீடுகளில் நோய்வாய்ப்பட்ட மற்றும் வயதானவர் களைச் சந்திப்பதில் முக்கியமாக கவனம் செலுத்தியதால், இந்த சேனையானது 'இரக்கத்தின் தாயின் சேனை' என்றும் அழைக்கப்பட்டது என்று மேலும் தெளிவுப்படுத்தினார். இன்று உலகளவில் மூன்று மில்லியன் ஆக்கமிக்க உறுப்பினர்கள் உள்ளதாக பேராயர் மேலும் பகிர்ந்து கொண்டார்.




## புனித பிரான்சிஸ் சேவியர் புனிதப்பட்டம் பெற்ற 400-வது ஆண்டு நினைவு திருப்பலி கொண்டாட்டம்

**பினாங்கு:** இதுவரை வாழ்ந்த மிகப் பெரிய மறைத்தூது துறவியான புனித பிரான்சிஸ் சேவியர் டிசம்பர் 3, 1552 ஆம் ஆண்டு காலமானார். அவரது மறைவதைத் தொடர்ந்து, எழுபது ஆண்டுகளுக்குப் பிறகு, மார்ச் 12, 1622 அன்று திருத்தந்தை 15-ஆம் கிரிகோரி அவர்களால் புனிதராக அறிவிக் கப்பட்டார்.

இதனிமித்தம், இங்குள்ள நகர்ப்பங்கு மேற்கண்ட 400-வது நினைவுநாளை சிறப்பாகக் கொண்டாடியது. அக்கொண் டாட்டத்தின் திருப்பலிக்குத் தலைமையேற்ற பினாங்கு மறைமவட்டத்தின் ஆயர் மேதகு செபஸ்தியன் பிரான்சிஸ் அவர்கள், பங்குத்தந்தை Msgr. அலோசியஸ் தான் மற்றும் உதவிப் பங்குத்தந்தை அருள்பணி. மைக்கல்தாஸ் ஆகியோருடன் இணைந்து கூட்டுத் திருப்பலியைக் கொண்டாடினார். இக்கொண்டாட்டத்திற்கான அறிவிப்பு மிகக் குறுகியக்கால அறிவிப்பாக இருந்தபோதிலும் அதிகமான கலந்துகொண்டனர்.

*தொடர்ச்சி, அடுத்துப்பக்கம்..*



# பெற்றோருக்கான ஒரு மாலைபொழுது!

**கோலாலம்பூர்:** பெற்றோருக்கான ஒரு மாலைபொழுது" (EFP) பயிற்சியானது கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தில் உள்ள பல பங்குகளில் பல ஆண்டுகளாக நடத்தப்பட்டு வரும் குடும்ப வாழ்க்கையை வளப்படுத்தும் உருவாக்கப்பயிற்சியாகும். இதில் நான்கு பிரிவுகள் உள்ளன. அவை தொடக்கத்தில் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமை ஆகிய இரு மாலைகளில் நடத்தப் பட்டதால், "பெற்றோருக்கான ஒரு மாலைபொழுது " என்று அழைக்கப்பட்டது.

ஆனாலும், சமீப காலங்களில், மாமறைமாவட்டத்தின் குடும்ப வாழ்வு ஆணையம் இதை ஒரு முழு நாள் நிகழ்ச்சியாக மாற்றியது. இதன் காரணமாக இப்பியிற்சி காலையில் தொடங்கி மாலைக்குள் முடிவடைகிறது. இந்த குடும்பத்தை வளப்படுத்தம் திட்டம் மறைந்த கத்தோலிக்க அமெரிக்க அருள்பணியாளர் Fr Chuck Gallagher அவர்களால் ஒன்றிணைக்கப்பட்டு தொடங் கப்பட்டது.

மேற்கண்ட மாற்றத்தின் விளைவாக, இம்முறை நான்கு பிரிவுகளும் நான்கு சனிக்கிழமைகளில் பிப்ரவரி 19 தொடங்கி மார்ச் 12 வரை ஒவ்வொன்றும் காலை 10 முதல் மதியம் 12 வரை நடத்தப்பட்டது. முதல் வாரம் 'நினைவுகள்' என்ற தலைப்பிலும், தொடர்ந்து 'செவிமடுத்தல், 'நினைவுகூர்தல்' மற்றும் 'வாழ்வை அளித்தல்' ஆகியவை முறையே நான்கு வாரங்களிலும் பகிரப்பட்டன.

இறுதி அமர்வில், இரு அருள்பணியாளர்கள் அருள்பணி. பீட்டர் அந்தோனி மற்றும் ஆண்ட்ரூ கூய் ஆகியோர் பகிர்வில் கலந்து கொண்டனர். அருள்பணி. பீட்டர் அவர்கள் தொடக்கவுரையாற்றினார். அவர்தம் உரை யில் அப்பயிற்சியில் பங்கேற்றதற்காக பெற்றோர்களுக்கும், தலைமைத்தாங்கிய




தம்பதிகளுக்கும், 4 வார விளக்கவுரை களையும் படக்காட்சிகளையும் செய்து வழங்கியவர்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

# வாழ்வதற்குத் தேவையான நீர் ஆதாரங்களையே அழித்து வருகிறோம்!

**வத்திக்கான்:** உலக தண்ணீர் நாள் ஐக்கிய நாடுகள் அவையின் தீர்மானத் துக்கு இணங்க ஆண்டு தோறும் மார்ச் 22 ஆம் நாள் உலகெங்கும் கொண்டாடப் படுகிறது.

செனெகல் நாட்டுத் தலைநகர் டாக்கரில் மார்ச் 21, கடந்த திங்களன்று தொடங்கிய ஒன்பதாவது உலக தண்ணீர் மாநாட்டில் உரையாற்றிய வத்திக்கானின் மனித முன்னேற்ற அவையின் இடைக்காலத் தலைவர் கர்தினால் மைக்கிள் செர்னி அவர்கள், தண்ணீர் வளங்கள் பாதுகாக் கப்படுவதில், அரசுகள் மற்றும், கொள்கை அமைப்பாளர்களின் பொறுப்புணர்வை எடுத்துரைத்தார். உலக அமைதி மற்றும், வளர்ச்சியோடு தண்ணீர் முக்கிய தொடர்புகொண்டிருப்பதற்கு, தற்போது உக்ரைனில் இடம்பெற்றுவரும் போர் ஓர் எடுத்துக்காட்டு என்றும், உக்ரைன் நாடு போரால் அழிக்கப்பட்டுவருவதால் ஏற்கனவே துன்புறும் அந்நாட்டு மக்கள் தண்ணீர் பற்றாக்குறைவால் இறக்க நேரிடும் என்றும், கர்தினால் செர்னி அவர்கள் எச்சரிக்கை விடுத்தார்.

தண்ணீரையும், அதன் வளங்களையும் முறைகேடாகப் பயன்படுத்துவதன் வழியாக, வருங்காலப் போர்களுக்குத்



*செனகலில் 9-வது உலக தண்ணீர் மாநாடு*

தயாராகிக்கொண்டிருக்கிறோம் என்ற உண்மையை நாம் புறக்கணிக்க முடியாது என்றும், நம் குறுகியகாலக் கண்ணோட் டத்தில் உயிர் வாழ்க்கைக்குத் தேவையான நீர் ஆதாரங்களையே நாம் அழித்து வருகிறோம் என்றும் அவர் எடுத்தியம்பினார்

மார்ச் 22, கடந்த செவ்வாயன்று உலக தண்ணீர் நாள் சிறப்பிக்கப்பட்டபோது, உலக அளவில் இருநூறு கோடிக்கு மேற்பட்ட மக்கள் சுத்தமான குடிநீர் இன்றி இருக்கின்றனர் என்றுரைத்த கர்தினால் செர்னி அவர்கள், தண்ணீரும், நலவாழ்வு வசதிகளும் தேவைப்படும் மக்களுக்கு, திருஅவையும், திருஅவை அமைப்புகளும், மதவேறுபாடின்றி பணியாற்றி வருவதை யும் சுட்டிக்காட்டினார்.

### அரசுகளின் பங்கு

சுத்தமான குடிநீர் மற்றும், நலவாழ்வு வசதிகளைப் பெறுவது, மனித உரிமைகளில் ஒன்று என்பதை ஏற்றுள்ள ஐ.நா. நிறுவனம், இவ்வுரிமை, வாழ்வை முழுமையாக வாழ்வதற்கும், அனைத்து மனித உரிமைகளுக்கும் இன்றியமை யாதது என்று, 2020ம் ஆண்டில் கூறியிருப்பதையும் குறிப்பிட்டுப் பேசிய கர்தினால் செர்னி அவர்கள், இதில் அரசுகளின் கடமையை எடுத்துரைத்தார்.

தண்ணீர் ஆதாரங்களை வைத்தே சில நாடுகளில் பிரச்சனைகள் தொடங்கு கின்றன என்றும், இப்பிரச்சனைகளைக் களைய போர்கள் அல்ல தீர்வு, மாறாக உரையாடலே என்பதையும் கர்தினால் செர்னி அவர்கள் வலியுறுத்திக் கூறினார்.

"நிலத்தடி நீர்: கண்ணுக்குத் தெரியாத தைக் காணச் செய்யும்" என்ற தலைப்பில், மார்ச் 22 இச்செவ்வாயன்று உலக தண்ணீர் நாள் சிறப்பிக்கப்பட்டது.

*முதல் பக்கத் தொடர்ச்சி...*

புனித பிரான்சிஸ் சேவியர் நமது நாட்டின் மண்ணில் பாதம் பதித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆயர் அவர்கள் அவரது உரையில், நாம் புனிதர்களின் பிறந்த நாளை அல்ல, இறப்பு நாளை நினைவுகூர்ந்து கொண்டாடுகிறோம். ஏனெனில், நமது வயது முதிர்ந்த காலத்தில்தான் நமது மறைத்தூதுப் பணியை நாம் அறிகிறோம். மேலும் நமது முதிர்ச்சியின் போதுதான் நமது நம்பிக்கை அதிகரிக்கிறது என்று தெளிவுப்படுத்தினார். தொடர்ந்து, புனித பிரான்சிஸ் சேவியர் போன்று, நாமும் வாழும் காலத்தில் நமது நம்பிக்கை வாழ்வுக்கு ஏற்ப கிறிஸ்துவுக்கான சாட்சிய வாழ்வுக்குச் சான்றுபகர வேண்டும் என்றார்.

அவரது உரையில், புனிதர்களின் வாழ்க்கை உண்மையான சாட்சிய வாழ்க்கை என்பதால் அவர்களின் வாழ்க்கை இன்றியமையாதது என்றும் ஆயர் கூறினார். மறைநூலில் விவாதங்கள் எழுப்ப இயலும். ஆனால் புனிதர்களின் வாழ்க்கை அப்படியல்ல. அதை விவாதிக்க முடியாது. புனிதர்களின் வாழ்க்கை கோட்பாடுகள் இல்லை. அவர்கள் தங்கள் நம்பிக்கையை முதன்மைப்படுத்தி வாழ்ந்த வாழ்க்கை வரலாற்றை அடிப்படையாகக் கொண்டது என்று மேலும் தெளிவுப் படுத்தினார்.

நிறைவாக, புனித பிரான்சிஸ் சேவியர் புறவினத்தாரிடையே மறைபரப்புச் செய்வ தில் அதிகம் அக்கறையும் ஆர்வமும் கொண்டிருந்தார் என்றும்; அவர் ஆசியாவுக்கு வந்தது நாடுகளைக் கைப்பற்ற



அல்ல; மாறாக ஆன் மாக்களை இயேசுவுக் காகக் கைப்பற்ற என்றும் நமது நாட் டில் ஏறக்குறைய 500 ஆண்டுகளுக்கு முன் நற்செய்தி விதைத்துச் சென்றார் என்ற வரலாற்று உண்மை யையும் எடுத்துரைத் தார்.

## உலக அமைதிக்கான தாகம்!

**நம் உலகம் அமைதிக்காகத் தாகம் கொண்டுள்ளது, இதற்கு ஒவ்வொரு மனிதரின் இன்றியமையாத முயற்சியும், தொடர் பங்களிப்பும் தேவைப்படுகின்றன.**

***(21-03-2022, திருத்தந்தை பிரான்சிஸ்)***



# ஒப்புரவுக்கு திருந்தி... திரும்பி வருவோம்!

தவக்காலத்தின் நான்காம் ஞாயிற்றுக் கிழமையில் இருக்கும் நமக்கு இன்றைய நாள் வாசகங்கள் "அளவுகடந்த அன்பு கொண்டிருக்கும் கடவுளோடு ஒப்புரவா குங்கள்" என்ற சிந்தனையை வழங்குகிறது. இரக்கமும், அன்பும் கொண்ட ஆண்டவ ரோடு ஒப்புரவாகவேண்டும் என்பதுதான் இன்றைய நாள் வாசகங்களின் சாராம்சமாக இருக்கிறது.

ஊதாரித்தனமாக வாழ்க்கை வாழ்ந்த இளைய மகன் தன்னுடைய தவறை உணர்ந்து மன்னிப்புக் கேட்கும்போது, அவனை அவனுடைய தந்தை மனதார மன்னித்து ஏற்றுக்கொண்டதுபோல, தந்தை கடவுளும் நாம் செய்யும் தவறுகளை மனதார மன்னித்து ஏற்றுக்கொள்வார் என்பதை இது நமக்கு உணர்த்துகிறது.

விவிலியம் முழுமைக்கும் இந்த உண்மை யைத்தான் நாம் தொடர்ந்து வாசிக்கின் றோம், திருப்பாடல் 103:8 ஆம் வசனம் சொல்கிறது, "ஆண்டவர் இரக்கமும், அருளும் கொண்டவர்; நீடிய பொறுமையும், பேரன்பும் உள்ளவர்" என்று. எனவே அத்தகைய இரக்கமுள்ள கடவுளிடம் நாம் நமது பாவ வாழ்விலிருந்து மனமாறி, அவரோடு ஒப்புரவாக வேண்டும். புனித பவுல் கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாம் திருமுகத்திலிருந்து எடுக்கப்பட்ட இன்றைய இரண்டாம் வாசகத்தில் "கடவுளோடு ஒப்புரவாகுங்கள்" என்று அழைப்புவிடுக் கிறார்.

இன்றைய நற்செய்தியில் லூக் 15:1-3 வசனத்தில் பரிசேயரும் மறைநூல் அறிஞரும் இயேசு ஆயக்காரரோடும் பாவி களோடும் உறவாடுவதும், உண்பதும் இருப்பதைக் காண்கின்றனர். இது ஒரு பெரியக் குற்றம் என முணுமுணுக் கின்றனர். அவர்களுக்கு ஊதாரி மகனின் உவமையை எடுத்துரைக்கிறார்.

மனித பலவீனங்கள் நம் எல்லோ ரையும் அடிமைப்படுத்துவதை அனுபவ வாயிலாக அறிந்த உண்மைதான். நாம் பாவம் செய்யக்கூடாது என்பதே இறைவனின் விருப்பமும் எதிர்பார்த்தலும் ஆகும். ஆயினும் பாவத்திற்கு அடிமையாகிவிட்ட நிலையில் இறைவன் நம்மைக் கைவிடுவதில்லை. பழைய ஏற்பாட்டிலும் சரி, புதிய ஏற்பாட்டிலும் சரி அழுத்தம் திருத்தமாக கூறப்படும் ஒரே உண்மை இது, பாவம் செய்தோம் இறைவா, எங்கள் மேல் தயவாயிரும்" என்று கூறி எப்போது அவர்பால் திரும்புகிறோமோ அப்போதே ஓடோடி வந்து இறைவன் நமக்கு உதவுவார்

இன்றைய நற்செய்தி வாசகத்தில், "அப்பா கடவுளுக்கும் உமக்கும் எதிராக நான் பாவம் செய்தேன்" என்று மனம் திரும்பும் இளைய மகனை ஆடை அணிகலன்களால் அலங்கரிப்பதைப் பார்க்கின்றோம். இறைவன் தண்டிப்பவர் அல்ல; மன்னிப்ப வர். பாவமே எனினும் அதிலிருந்து மனம் திரும்பும் போது மன்னிப்பும் அதைத் தொடர்ந்து மகத்துவமான வாழ்வும் வந்தடையும். எனவே உலக காரியங்கள் நம்மை இறைவனிடம் இருந்து தொலைதூரம் ஆக்கியிருந்தால், நவநாகரிக வாழ்வில் நாம் காணாமல் போயிருந்தால் இன்றே வீடு திரும்புவோம். இத்தவக் காலத்தில் உழைப்பின் மேன்மையும், உலக காரியங்களில் காட்டவேண்டிய முனைப்பை விட கடவுளிடம் செலவிடும் நேரத்தை அதிகப்படுத்த வேண்டிய அவசியத்தினையும் உணர்ந்து செயல்படுவோம்.

*ஆவி. டேவிட், குளுவாங்*

**தவக்காலம் 4-ஆம் ஞாயிறு**

| | |
|---|---|
| 1-ம் வாசகம்: | யோசுவா 5:9a, 10-12 |
| தி. பாடல்: | 34: 1-2. 3-4. 5-6 |
| 2ம் வாசகம்: | 2 கொரி 5: 17-21 |
| நற்செய்தி: | லூக்கா 15: 1-3, 11-32 |

ஞாயிறு வாசகம் ஆண்டு 3
வாரநாள் முதல் வாசகம் –ஆண்டு 2
திருப்புகழ் மாலை—வாரம் 4